தினமணி

## நெல் அறுவடைக்குப்பின் செய்ய வேண்டிய நேர்த்தி முறைகள்

First Published : 22 Jul 2010 12:00:00 AM IST

விருத்தாசலம், ஜூலை 21: நெல் அறுவடைக்குப்பின் செய்ய வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் ஆகியோர் விளக்கியுள்ளனர். விருத்தாசலம் மற்றும் கம்மாபுரம் ஒன்றியங்களில் தற்போது குறுவை நெல் சாகுபடி,7000 ஹெக்டேர், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. நெல்லில் கூடுதல் விலைபெறுவது அதிலுள்ள முழு அரிசியின் அடிப்படையில்தான் உள்ளது. நெல்மணிகள் அரவையில் 62 விழுக்காடு முழு அரிசி கிடைத்து அறுவடைக்குப்பின் செய்ய வேண்டிய நேர்த்திமுறைகள் குறித்து வேளாண்மை துணை இயக்குநர் தனவேல் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் அமுதா ஆகியோர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:நெல் ரகங்களின் வயதிற்கேற்றவாறு பயிரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெல்கதிரின் மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தாலே அறுவடையை மேற்கொள்ளலாம். இதனால் மணிகள் உதிர்ந்து சேதமாவதைத் தடுக்கலாம்.

அறுவடையின்போது, ஈரப்பதம் 19 முதல் 23 சதவீதம் இருக்க வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரும் நெல்லின் ஈரப்பதம் 17 சதவீதத்துக்குள் இருக்க வேண்டும்.நெல் மணிகளை சேமித்து வைத்து விற்பனை செய்ய அறுவடை செய்த நெல்லை நன்றாக காயவைத்து, சுத்தம் செய்து ஈரப்பதம் 13 சதவீதத்துக்கு குறைக்க வேண்டும். இதனால் பூஞ்சாண வித்துக்கள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படுவதை தடுக்கலாம்.
முதிர்ந்த நெல் மணிகளில் இருந்து கிடைக்கும் அரிசி கடுமையானதாகவும், உறுதியாகவும் இருக்கும். அதிக சூரிய வெப்பத்தில் நெல்லை காயவைக்கக் கூடாது. அறுவடை செய்த நெல்லை சுத்தம் செய்து சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி, தரையின் மீது மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி, மூட்டைகளை அடுக்கி வைத்தால் சுவற்றின் ஈரப்பதம் நெல்மணிகளைத் தாக்காது.
சேமித்து வைத்துள்ள நெல்லில் அந்துப்பூச்சி தாக்காமலிருக்க மாலத்தியான் மருந்தை 10 மில்லி லிட்டரில், 1 லிட்டர் நீரில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகள் மீது தெளிக்க வேண்டும். பூச்சிகள், பூஞ்சாணங்கள் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுப்போன நெல்லை தனியே பிரித்துவிட வேண்டும். ரகங்கள் வாரியாக தரம் பிரித்து விற்பனைக்கு கொண்டு வந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்று நல்ல லாபம் பெறமுடியும் என தெரிவித்தனர்.

# அதிக லாபம் தரும் ஒருங்கிணைந்த நெல், மீன் மற்றும் கோழி பண்ணை முறை

First Published : 22 Jul 2010 12:00:00 AM IST



ஒருங்கிணைந்த நெல், மீன் மற்றும் கோழி பண்ணை முறையில் அமைக்கப்பட்டுள்ள நிலம்.

சிதம்பரம், ஜூலை 21: ஒருங்கிணைந்த பண்ணை முறை என்பது நெல் பயிருடன் மீன் மற்றும் கோழி பண்ணைகளை ஒருங்கிணைப்பதாகும். நெல் நடவு செய்த நிலத்தில் கோழி மற்றும் மீன் பண்ணைகளை ஒருங்கிணைப்பதன் மூலமாக விவசாயிகள் கூடுதல் லாபத்தினை பெறலாம்.

மீன் மற்றும் இறைச்சியின கோழி ஒருங்கிணைந்த பண்ணை திட்டமானது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இத்திட்டத்தின்படி கோழிக்கூண்டு மற்றும் மீன் அகழியானது நெல் வயலின் ஒரு பகுதியில் அமைக்கப்படுகின்றது. இவ்வாறு அமைக்கப்பட்ட மீன் அகழியில், கோழியின் எச்சம் விழுமாறு கோழிக்கூண்டு அமைக்கப்பட வேண்டும். கோழியின் எச்சமானது மீன்களுக்கு நல்ல உணவாக பயன்படுவதோடு மட்டுமல்லாமல் சிறந்த இயற்கை உரமாகவும் செயல்படுகின்றது. நெல் வயலின் 5 செ.மீ. நீர்பரப்பில் ஏற்படும் வெப்ப மாற்றங்கள் மீன்களைப் பாதிக்கும் என்பதால் பகல் பொழுதில் மீன்கள் நீந்தி களிப்பதற்கு இந்த அகழிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

மேலும் மீன்கள் நெல் வயலில் நீந்தி அவற்றின் களை மற்றும் பூச்சிகளை உண்டு வளரும். மேலும் கோழிக்கழிவு நேராக அகழி நீரில் கலந்து, நெல் வயலில் உள்ள நீருக்குள் ஊடுருவி உரமாக பயன்படும்.

நாற்றங்கால் தயார்படுத்தல்: நாற்றங்காலுக்கு என ஒதுக்கப்பட்ட நிலத்தினை நன்கு சேற்று உழவு செய்து, சமன்படுத்தி தயார் நிலைக்கு கொண்டு வர வேண்டும். அறிவுறுத்தப்பட்ட அளவிலான நெல் விதைகளை, விதைப்பதற்கு 10 மணி நேரத்துக்கு முன்பாக நீரில் ஊற வைக்க வேண்டும்; பின்னர் ஊறிய விதைகளை சுமார் 24 மணி நேரம், முளைப்புக்காக இருட்டு அறையில் வைக்க வேண்டும், பின்பு முளைத்த விதைகளை சீராக நெல் நாற்றங்காலில் விதைக்க வேண்டும். நாற்றங்காலில் முளைத்த நாற்றுகளானது நன்கு பராமரிக்கப்பட வேண்டும்.

நடவு வயல் தயார் படுத்தல்: நன்கு உழவு செய்து தயார்படுத்தப்பட்ட நடவு வயலில் 1 மீட்டர் ஆழம் மற்றும் 0.75 மீட்டர் நீளம் கொண்ட மீன் அகழியானது வெட்டப்பட வேண்டும். இந்த மீன்

அகழிக்கென நடவு நிலத்தின் 10 சதவீத இடத்தை ஒதுக்க வேண்டும். நடவு வயலில் உள்ள நீர் வெளியேறாத வண்ணம் வரப்புகள் உறுதியாக அமைக்கப்பட வேண்டும்.
மீன்கள் நெல் அறுவடைக்கு 15 நாள்களுக்கு முன்பு பிடித்து விற்பனை செய்யலாம். அதுபோன்று இறைச்சியின கோழி வளர்ப்பிற்கான மொத்த காலம் 45 நாள்கள். கோழிக்குஞ்சுகளை முதல் 12 நாள்கள் தனியறையில் 100 வால்ட் பல்பினை பொருத்தி வைத்திருக்க வேண்டும். 12 நாள்களுக்கு பிறகு குஞ்சுகளை நடவு நிலத்திலுள்ள கோழி கூண்டுக்கள் விடப்பட வேண்டும்.
நெல்நடவு: குறிப்பிட்ட காலத்துக்கு பிறகு நாற்றங்காலில் உள்ள நாற்றுகளை நடவு நிலத்தில் 15 செ.மீ. இடைவெளியில், குத்துக்கு 2 நாற்றுகள் வீதத்தில் பிடுங்கி நடவேண்டும். வேப்ப விதைச்சாறு 5 சதவீதம், பயிர் பாதுக்காபுக்கென தெளிக்கப்படுகின்றது. இவ்வாறு செயல்படுத்தப்படும் நெல், மீன், கோழி பண்ணையத்தின் மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் லாபம் கிடைக்கும். இத்திட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழக உழவியல்துறை ஒருங்கிணைப்பாளகராக இருந்து மத்திய அரசு நிதி உதவியுடன் பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கத்தரி, மிளகாய் நாற்றுகள் விற்பனை**

First Published : 21 Jul 2010 01:26:05 PM IST

திருச்சி, ஜூலை 20: திருச்சி அருகே சிறுகமணியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விதை நெல், கத்திரி நாற்று, மிளகாய் நாற்று உள்ளிட்டவை விற்பனை செய்யப்படுகின்றன.

இதுகுறித்து நிலைய இணைப் பேராசிரியரும், தலைவருமான அ. சகுந்தலை தெரிவித்தது:

இந்த நிலையத்தில் விவசாயிகளின் நலன்களுக்காக அவ்வப்போது புதிய விஞ்ஞான தொழில்நுட்பங்களும், பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இதேபோல, விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகள், நாற்றுகள் போன்றவற்றையும் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது, கிழக்குக் கடற்கரை நெட்டை (இ.சி.டி.) ரக தென்னை நாற்றுகள் தலா ரூ. 25-க்கும், ஆந்திர பொன்னி (பிபிடி 5204) விதை நெல் கிலோ ரூ. 20 வீதமும், ஊர்ச்சி ரக கத்திரி நாற்று (குழித்தட்டு நாற்று) 35 பைசா வீதமும், பிரியங்கா ரக மிளகாய் நாற்று (குழித்தட்டு நாற்று) 40 பைசா வீதமும் விற்பனை செய்யப்படுகின்றன.

தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை நேரடியாக அணுகி முன் பணம் செலுத்தி பதிவு செய்தோ அல்லது உடனடியாகவோ பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர்.

**வறட்சியைத் தாங்கி வளர்ந்து அதிக லாபம் தரும் சப்போட்டா**

First Published : 21 Jul 2010 01:01:54 PM IST

அரவக்குறிச்சி, ஜூலை 20: வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பழ மரமாக சப்போட்டா விளங்குகிறது.

ஆண்டுக்கு 2 முறை அறுவடை செய்யக்கூடிய இந்தப் பழ மரத்தின் பராமரிப்பு செலவு மிகக் குறைவாகும். சாகுபடி காலங்களில் அதிகக் கூலியாள்களும் தேவையில்லை. முக்கியமாக, தண்ணீர் அதிகம் தேவைப்படாது.

இதன் சாகுபடிக்கு சொட்டு நீர்பாசன முறை சிறப்பானது என வேளாண் அலுவலர்கள் பரிந்துரைக்கின்றனர். உரத் தேவையும் மிகக் குறைவு. நட்ட 3 ஆண்டுகளில் காய்ப்புக்கு வரும். ஏக்கருக்கு 65 செடிகள் வரை நடலாம். சராசரியாக ஆண்டுக்கு 50 முதல் 100 கிலோ வரை மகசூல் கிடைக்கும். இந்தப் பழங்கள் கிலோ ரூ. 10-க்குக் குறையாமல் விலைபோகின்றன.

மார்ச் - ஏப்ரலில் பூத்து, 90 நாள்களில் காய்ப்புக்கு வரும். அடுத்து அக்டோபர்- நவம்பரில் பூத்துக் காய்க்கும். இதன் சாகுபடிக்கு அரசு வேளாண் துறையில் இருந்து சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சத மானியம் அளித்து வருகின்றனர்.

**50 விவசாயிகள் கேரளத்துக்கு வேளாண் சுற்றுலா**

First Published : 21 Jul 2010 10:03:26 AM IST

தருமபுரி, ஜூலை 20: தோட்டக்கலை பயிர்களில் நவீன சாகுபடி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தருமபுரி தோட்டக்கலைத் துறை சார்பில் தருமபுரி, நல்லம்பள்ளி ஒன்றியங்களைச் சேர்ந்த 50 விவசாயிகள் கேரளத்துக்கு செவ்வாய்க்கிழமை சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த 5 நாள் சுற்றுலாவின் போது கேரளத்தில் செயல்படுத்தப்படும் மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு உள்ளிட்ட பயிர் சாகுபடி முறைகள் மற்றும் விற்பனை நிலவரம் குறித்து அறியலாம். மேலும் அம்மாநிலத்தில் உள்ள தோட்டக்கலைத் துறை சார்ந்த ஆராய்ச்சிக் கல்லூரிகள், காய்கறி பண்ணைகளுக்குச் சென்று தங்களின் சந்தேகங்களை கேட்டறியலாம்.

முன்னதாக, சுற்றுலாவில் கலந்துகொள்ளும் விவசாயிகளுக்கு, தமிழகத்தில் செயல்படுத்தப்படும் தோட்டக்கலை பயிர் சாகுபடி முறைகள் மற்றும் கேரளத்தில் செயல்படுத்தப்படும் சாகுபடி முறைகள் குறித்து பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தின் பேராசிரியர் ஸ்ரீதர் விளக்கினார்.

மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் துரைசாமி, தருமபுரி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ஆர்.ஆர். சுசீலா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கிருஷ்ணகிரியில் ரூ.1 கோடியில் குளிர்பதனக் கிடங்குடன் கூடிய மா வணிக வளாகம்**

First Published : 21 Jul 2010 09:58:29 AM IST

கிருஷ்ணகிரி, ஜூலை 20: கிருஷ்ணகிரியில் மா விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.1 கோடி மதிப்பில் குளிர்பதனக் கிடங்குடன் கூடிய மா வணிக வளாகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குறைந்தது 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. பெங்களூரா, நீலம், அல்போன்சா, ரூமானி, பங்கனப்பள்ளி, பீத்தர், செந்தூர், சேலம் பெங்களூரா, அம்ராபாலி, இமாயுதீன் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட மா ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இங்கு உற்பத்தியாகும் மாம்பழங்கள் ஆந்திரம், கேரளம், பிகார், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தனியார் மண்டிகள் மூலம் மா விவசாயிகளுக்கு குறைந்த விலையே கிடைக்கிறது. இதனால் மாம்பழங்களை பல நாள்கள் கெடாமல் வைத்து, நல்ல விலையில் விற்று விவசாயிகள் பயனடையும் வகையில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில், கிருஷ்ணகிரியில் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் குளிர்பதனக்கிடங்குடன் கூடிய மா வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

2.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இவ்வளாகத்தில் நிர்வாகப் பிரிவு, நவீன தகவல் மையம், பொருள் பரிமாற்ற அறை, தரம் பிரிப்பு மற்றும் சிப்பம் கட்டுவதற்கான அறை, மின்னணு எடைக் கருவிகள், வணிகர்களுக்கு என 10 கடைகள் கொண்டதாக இருக்கும்.

மேலும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் வசதிக்காக ஏ.டி.எம்., ஓட்டல், ஏல மையம், விவசாயிகளுக்கான பயிற்சி வளாகம் ஆகியனவும் அமைக்கப்பட உள்ளன.

இங்குள்ள குளிர்பதனக் கிடங்கு மூலம் 50 மெட்ரிக் டன் மாம்பழங்களை வைத்துப் பராமரிக்கலாம். இதனால் மாவட்டத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் நேரடியாகப் பயன்பெறுவர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 82.03**

First Published : 21 Jul 2010 11:04:34 AM IST

சேலம், ஜூலை 20: மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 82.03 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,577 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 999 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 44.00 டி.எம்.சி.

**விவசாயத் தொழிலாளர் பாதுகாப்புத் திட்ட பயனாளிகள் இன்று தேர்வு**

First Published : 21 Jul 2010 12:22:42 PM IST

சிவகாசி, ஜூலை 20: தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் (சமூக நலம்) பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயனாளிகள் சேர்க்கும் முகாம் விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் ராஜபாளையத்தில் ஜூலை 21 ஆம் தேதி நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த அவரது செய்திக்குறிப்பு:

ஸ்ரீவில்லிபுத்தூரிலில் வட்ட அளவில் காலை 10 மணியளவில் மேட்டுத் தெருவில் உள்ள ராமராஜ் திருமண மண்டபத்திலும், ராஜபாளையத்தில் வட்ட அளவில் பிற்பகல் 3 மணியளவில் கோபாலபுரம் சமுதாயக் கூடத்திலும் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நல வாரிய இணைத் தலைவர் வி.பி.ராஜன் ஆகியோர் தலைமையில் பயனாளிகள் சேர்ப்பதற்கான முகாம் நடைபெற உள்ளது.

இந்த முகாமில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் (சமுக நலம்) பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், புதிதாக விவசாயத் தொழிலாளர்கள் அட்டை கோருதல் மற்றும் உறுப்பினர் சேர்த்தல், திருமண நிதி உதவி, இயற்கை மரணம், விபத்தில் மரணம் அடைதவர்களின் வாரிசுதாரர்களுக்கு நிதியுதவி, விவசாயத் தொழிலாளர் அட்டை வைத்திருப்பவர்கள் மட்டும் முதியோர் உதவித்தொகை பெறுதல் ஆகிய வற்றில் பயன்பெற மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் குறிபிட்ட நேரத்தில் நேரில் மனுக்களை அளிக்கலாம் என ஆட்சியர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் கலந்துரையாடல்**

First Published : 21 Jul 2010 10:56:50 AM IST

வெள்ளக்கோவில், ஜூலை 20: வெள்ளக்கோவில் ஒன்றியம், பச்சாபாளையம் கிராமம், முருக்கன்காட்டுவலசு கிராமத்தில், தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக நீர்வள-நிலவளத்திட்ட விவசாயிகள் கலந்துரையாடல் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷தாராபுரம் கோட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் டாக்டர் வி.முத்து கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், நீலநாக்கு நோய், கோமாரி நோய் தடுப்பூசி, அடர் தீவனம் வழங்குதல், உண்ணி நீக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

÷கூட்டத்துக்கு, பச்சாபாளையம் பாசன சபைத் தலைவர் ஜி.குழந்தைசாமி முன்னிலை வகித்தார். வட்டார கால்நடை மருத்துவர்கள் என்.குழந்தைசாமி, ஆர்.மைதிலி ஆகியோர் விவசாயிகளின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தனர்.

**குமரி மாவட்டத்தில் மழை நீடிப்பு: அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

First Published : 21 Jul 2010 01:10:36 PM IST

நாகர்கோவில், ஜூலை 20: கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைப் பகுதிகளில் மழை நீடிப்பதை அடுத்து, அவற்றின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பெருஞ்சாணி நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்துள்ளது.

திங்கள்கிழமை 47.50 அடியாக இருந்த பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 49.50 அடியாக உயர்ந்திருந்தது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 22.80 அடியில் இருந்து 24.10 அடியாகவும், சிற்றார் 1 நீர்மட்டம் 8.69 அடில் இருந்து 9.35 அடியாகவும், சிற்றார் 2 நீர்மட்டம் 8.79 அடியில் இருந்து 9.45 அடியாகவும், முக்கடல் 2.50 அடியில் இருந்து 3.80 அடியாகவும் உயர்ந்திருந்தது.

செவ்வாய்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக அடையாமடை பகுதியில் 37 மி.மீ. மழை பெய்துள்ளது. மாவட்டத்திலுள்ள அணைப் பகுதிகளிலும், பிற இடங்களிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை- 13, பெருஞ்சாணி- 21.2, சிற்றார் 1- 16, சிற்றார் 2- 20, முக்கடல்- 35, சுருளோடு- 29.3, பூதப்பாண்டி- 20.1, கன்னிமார்- 12.5, நாகர்கோவில்- 15.6., புத்தன்அணை- 21.4, ஆரல்வாய்மொழி- 10.8, கோழிப்போர்விளை- 24, குளச்சல்- 2.6, கொட்டாரம்- 2.6, இரணியல்- 4.4, ஆனைக்கிடங்கு- 13.4, குருந்தன்கோடு- 16.2, நிலப்பாறை- 2, முள்ளங்கினாவிளை 22.8, மயிலாடி- 6.2.

பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 1241 கனஅடி, பெருஞ்சாணி அணைக்கு 940 கனஅடி, சிற்றார் 1 அணைக்கு 167 கனஅடி, சிற்றார் 2 அணைக்கு 266 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அனைத்து அணைகளும் செவ்வாய்க்கிழமையும் மூடப்பட்டிருந்தன.

**"முந்திரி நடவு செய்யும்விவசாயிகளுக்கு மானியம்'**

விருத்தாசலம்: விருத்தாசலம் வட்டார விவசாயிகள் ஒட்டு முந்திரி நடவு செய்தால் மூன்று ஆண்டுகளுக்கு மானியம் வழங்கப்படும் என தோட்டக்கலை உதவி இயக்குனர் அறிவித்துள்ளார்.இதுகுறித்து விருத்தாசலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி

விடுத்துள்ள செய்திக் குறிப்பு:விருத்தாசலம் வட்டாரத்தில் முந்திரியில் நெருக்கு நடவு மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப் பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரு எக்டர் காலி நிலத்தில் 5க்கு 4 இடைவெளியில் 500 முந்திரி ஒட்டுச் செடிகளை நடவு செய்ய வேண்டும்.மொத்த மானியமாக 3 ஆண்டுகளுக்கு ஒரு எக்டருக்கு 32 ஆயிரத்து 850 ரூபாய்க்கு  வழங்கப்படுகிறது.

முதல் ஆண்டில் 19 ஆயிரத்து 710 ரூபாய்க்கு முந்திரி ஒட்டு செடிகள், இடுபொருட் கள், நடவு மற்றும் பராமரிப்பு செலவும், இரண் டாம் ஆண்டிற்கு 6,570 ரூபாய் மதிப்பிற்கும், மூன்றாம் ஆண்டிற்கு 6,570 ரூபாய் மதிப்பிற்கும் மானியம் வழங்கப்படுகிறது.ஆர்வமுள்ள விவசாயிகள் கம்யூட்டர் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், இரண்டு பாஸ் போர்ட் சைஸ் புகைப் படத்துடன் துறை களப்பணியாளர்களை தொடர்பு கொள்ளலாம். மேலும் விருத்தாசலம் ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகத்தில் உள்ள தோட்டக் கலை உதவி இயக் குனர் அலுவலகத்தில் விவசாயிகள் தேவைப் பதிவேடு பராமரிக்கப்படுகிறது.  இந்த பதிவேட்டில் விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

**கால்நடைத்தீவன விலை உயர்வில் இருந்து தப்பிக்க சொந்தமாக சாகுபடி**

ஈரோடு:கால்நடைத் தீவனம் விலை கடுமையாக உயர்ந்து விட்ட நிலையில், மொடக்குறிச்சியை சேர்ந்த விவசாயி, கால்நடைத் தீவனப் பயிர்களை தெளிப்பு நீர்ப்பாசனம் மூலம், இயற்கை உரம் உதவியுடன் உற்பத்தி செய்கிறார்.மொடக்குறிச்சி அருகே சாமிநாதபுரத்தை சேர்ந்தவர் விவசாயி அர்த்தநாரீஸ்வரர். ஏராளமான மாடு, எருமைகளை பராமரித்து வருகிறார். மாட்டுத் தீவனம் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக கால்நடை வளர்ப்போர் பலர் அவதிப்படும் நிலையில், இவர் முக்கால் ஏக்கரில் மாட்டுத் தீவனங்களை மட்டுமே பராமரித்து வருகிறார்.

அவர் கூறியதாவது:மாட்டுத் தீவனத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேசமயம் தீவனங்களின் விலையும் உயர்ந்து வருகிறது. கால்நடைகளின் உணவுக்கு தீவன பயிர்களை வளர்க்க முடிவு செய்தோம். அதன்படி, முக்கால் ஏக்கரில் வேலிமசால், கோ-3 தீவனம் மற்றும் மல்பெரி செடிகளை வளர்த்து வருகிறோம். இந்த பயிர்களுக்கு இயற்கை உரம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

மண்புழு உரம் தயாரித்த பிறகு அதிலிருந்து வெளியேற்றப்படும் நீர், மண்புழுவின் கழிவுநீர் ஆகியவையே உரமாக பயன்படுத்தப்படுகிறது. இவை இயற்கை உரமாக இருப்பதால், மாட்டு தீவனங்களின் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. தண்ணீர் வீணாகக் கூடாது என்பதற்காக, முக்கால் ஏக்கரை சுற்றி தெளிப்பு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. 30 நாட்களுக்கு ஒரு முறை மாட்டு தீவனப்பயிர்கள் அறுவடைக்கு தயாராகி விடும்.நாங்கள் வளர்க்கும்

கால்நடைகளுக்கு இந்த தீவனப்பயிர்கள் போதுமானதாக இருக்கிறது. விவசாயிகள் காலியாகவுள்ள இடத்தில் இதுபோன்ற மாட்டு தீவனப்பயிர்களை பயிரிட ஆரம்பித்தால், அவரவர் கால்நடைகளுக்கு சுலபமான முறையில் மாட்டுத் தீவனம் கிடைக்க வாய்ப்புண்டு. இவ்வாறு அவர் கூறினார்.

**மா உற்பத்தியில் ஈரோடு வாலிபர்**

ஈரோடு:ஈரோடு அருகே பத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் பல்வேறு வகையான மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.தமிழகத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டத்தில் அதிகளவு மாம்பழம் சாகுபடி செய்யப்படுகிறது. இதையடுத்து மலைப்பகுதியில் ஓரளவு மாம்பழம் சாகுபடியாகிறது. ஈரோடு அருகே முத்துக்கவுண்டன் பாளையத்தில் பத்து ஏக்கரில் பல்வேறு வகையான மாம்பழங்களை, சின்னியம்பாளையத்தை சேர்ந்த முனியப்பன் உற்பத்தி செய்கிறார். ""மழை இல்லாததால், இந்தாண்டு மாம்பழம் உற்பத்தி அடியோடு குறைந்துவிட்டது,'' என, அவர் கூறினார்.

அவர் கூறியதாவது: நாங்கள் முத்துக்கவுண்டன் பாளையம் மற்றும் கரூர் பகுதியில் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து மாமரங்களை பராமரித்து வருகிறோம். இத்தொழிலில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறோம். இங்குள்ள பத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் நீலம், நடுச்சோலை, கிளிமூக்கு, செந்தூரம் ஆகிய மா மரங்களை பராமரித்து வருகிறோம். செந்தூரம், நடுச்சோலை சீஸன் முற்றிலும் முடிந்துவிட்டது. தற்போது, "நீலம்' மட்டுமே விளைச்சல் உள்ளது. அதுவும், முடியும் தருவாயில் உள்ளது.ஓராண்டாக மழை ஏமாற்றியதால், இந்தாண்டு மாம்பழம் உற்பத்தி அடியோடு குறைந்துவிட்டது. ஒரு மரத்துக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 50 கிலோ, அதிகபட்சம் 500 கிலோ மாம்பழம் கிடைக்கும்.

சரியான முறையில் உரமிட்டு பராமரித்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்க வாய்ப்புண்டு.மாமரங்களுடன் ஊடுபயிராக சப்போட்டா, கொய்யா போன்ற மரங்களை நட்டுள்ளோம். மாம்பழம் சீஸன் மிக விரைவில் முடியப்போகிறது. கொய்யா பழம் இனி வரவுள்ளது. மொத்த விலையில், ஒரு கிலோ நீலம் மாம்பழம் 30 ரூபாய்க்கு விற்கிறோம். இந்தாண்டு மழை பெய்தால் மட்டுமே, அடுத்தாண்டு மாம்பழம் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**மானிய விலையில் விதை சேமிப்பு கலன்**

ஈரோடு:மொடக்குறிச்சி வட்டார விவசாயிகளுக்கு மானியத்துடன் விதை சேமிப்பு கொள்கலன் வழங்கப்படுகிறது.மொடக்குறிச்சி, நஞ்சை ஊத்துக்குளி, கருந்தேவன் பாளையம், சாமிநாதபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் காய்கறி பயிர் உற்பத்தி அதிகம். மாவட்டம் முழுவதும் பல்வேறு வகையான காய்கறிகள் இங்கிருந்து அனுப்பப்படுகின்றன. கரும்பு, மஞ்சள், வாழை போன்ற பயிர்களும் இங்கு அதிகம் பயிராகின்றன. விதை கிராமம் திட்டத்தின் கீழ், மொடக்குறிச்சி வேளாண் குடோனில் நேற்று விதை சேமிப்பு கொள்கலன் மானிய விலையில் 49 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும், 49 கொள்கலன்கள் இரண்டு நாட்களுக்குள் வழங்கப்பட்டு விடும். இதன் விலை 1,300 ரூபாய். மானியம் கழித்து ஆயிரம் ரூபாய் விலைக்கு வழங்கப்படுகிறது. இவற்றில் 500 கிலோ விதைகளை இருப்பு வைக்க முடியும். மொடக்குறிச்சி வட்டாரத்தில் 25 டன் விதை நெல் வந்துள்ளது. தேவைப்படும் விவசாயிகள் உதவி இயக்குனரை அணுகி மானிய விலையில் விதை நெல் பெற்றலாம். பவானி பண்ணையில் இருந்து விதை நெல் கொண்டு வரப்பட்டுள்ளது.இத்தகவலை மொடக்குறிச்சி துணை வேளாண் அலுவலர்கள் முருகேசன், முருகன் தெரிவித்தனர்.

**செம்மை நெல் சாகுபடிக்கு 3 கிலோ விதை போதும்: இணை இயக்குனர் தகவல்**

நாமக்கல்: "செம்மை நெல் சாகுபடி முறைக்கு மூன்று கிலோ விதை போதுமானது' என, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன் தெரிவித்தார்.அவர் வெளியிட்ட அறிக்கை:மேட்டூர் கிழக்கு கரை வாய்க்கால் தண்ணீர் திறந்து விடப்பட்டவுடன் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது. வடமேற்கு பருவமழை முழுவதும் பெய்து கிணற்றின் நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ள உள்ளதால், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றி பயன் பெறலாம். இந்த முறையில் ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது. குறைந்த பரப்பு பாய்நாற்றங்கால், 13 நாள் இளவயது நாற்று, சதுர நடவு முறை, கோனோமீட்டர் மூலம் களையெடுத்தல் போன்றவை முக்கிய தொழில் நுட்பங்களாகும்.

தற்போது விதைப்புக்கு ஏற்ற ஏ.டி.டி., 33, 36, 43, 45 ஆகிய வெள்ளைப் பொன்னி மற்றும் ஐ.ஆர். 20 போன்ற நெல்ரகங்கள் நாமக்கல் மாவட்ட வேளாண் விரிவாக்க மையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்விதைகள் கிலோவுக்கு 5 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது.செம்மை நெல் சாகுபடி முறை மற்றும் பாய் நாற்றங்கால் தயாரிப்பு பற்ற ஒவ்வொரு கிராமத்திலும் வேளாண்துறை அலுவலர்கள் நேரில் வந்து செயல் விளக்கமாக

காட்டப்பட உள்ளனர். விதைகளை பெற அருகில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மழையில் காய்கறி பயிரிடுங்கள் தோட்டக்கலைத்துறை பரிந்துரை**

லாலாபேட்டை: "கரூர் மாவட்டம் கிருஷ்ணராபுரம் பகுதியில் தற்போதுள்ள மழையை பயன்படுத்தி விவசாயிகள் காய்கறி பயிரிடலாம்' என, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.அறிக்கையில் உள்ளதாவது:ஆடிப்பட்டம் மழை பெய்வதால், குறைந்த வயதுடைய காற்கறி பயிர் சாகுபடி செய்து விவசாயிகள் அதிக வருமானம் பெறலாம். தற்போது குறைந்து வரும் நிலப்பரப்பில், குறைந்த மண் வளத்தை பயன்படுத்தி காய்கறி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். குறுகிய வயதுடைய, அதிக மகசூல் தரக்கூடிய பயிர்களை சாகுபடி செய்து அதிக வருவாய் பெறமுடியும்.

தக்காளி, வெண்டை, மிளகாய், பாகல், பீர்க்கன், புடலை, சுரைக்காய் போன்றவற்றை அதிக அளவில் சாகுபடி செய்யலாம்.பழமரக்கன்றுகளை பொறுத்தவரை மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை ஆகியவை ஜூலை மதல் நவம்பர் வரை நடவுக்கு ஏற்ற பருவம். 50 சதவீத மானிய விலையில் பழமரக்கன்று விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அலுவலரிடம் தேவைக்கு பதிவு செய்து, வாங்கி பயனடையலாம்.

**கால்நடை மருத்துவ முகாம்**

குளித்தலை: குளித்தலை, புழுதேரியில் உள்ள அறிவியல் மையம் சார்பில் இன்று தோகமலை அருகே நெய்தலூரில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடக்கிறது.நெய்தலூர், காளியம்மன் கோவில் திடலில் நடக்கும் முகாமில் கால்நடைக்கு குடற்புழு நீக்கம், சினை பரிசோதனை, தடுப்பூசி, மலடு நீக்கம் உள்ளிட்ட சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கப்படுகிறது.வேளாண் அறிவியல் மையம் கால்நடை டாக்டர், வேளாண்துறை விஞ்ஞானிகள் கலந்து கொள்கின்றனர். "கால்நடை வைத்துள்ளோர் தவறாமல் முகாமில் கலந்து கொள்ள வேண்டும்' என திட்ட ஒருங்கிணைப்பாளர் திரவியம் கேட்டுக் கொண்டார்.

**வேளாண் கூட்டுறவு வங்கிகளின் ஆவணங்கள் தணிக்கை**

ராமநாதபுரம்:மாவட்டத்தில் வேளாண் கூட்டுறவு வங்கிகளால் ஏற்படும் குழப்பங்கள் அதிகரித்து வருவதால், அனைத்தின் ஆவணங்களையும் தணிக்கை செய்ய வேண்டியது அவசியம் எழுந்துள்ளது.விவசாயத்தில் பின்தங்கிய மாவட்டம் என்பதால், தொடக்க வேளாண் கூட்டுறவு

வங்கிகளின் செயல்பாடு இங்கு அவசியமாக உள்ளது. பயிர் கடன் உள்ளிட்ட பல்வேறு பயன்பாடு இருப்பதால், விவசாயிகளுக்கு இந்த வங்கி சேவை தவிர்க்க முடியாததாக உள்ளது.

விவசாயிகளின் இந்த கட்டாயத்தை புரிந்து கொண்டு சில வங்கிகளில் வரக்கூடிய அரசின் நிதி தவறாக பயன்படுத்தப்படுவதாக குற்றசாட்டு இருந்து வருகிறது. குறிப்பாக உரங்களுக்கு வழங்கப்படும் மானியத்தொகை, பயிர் கடன் தள்ளுபடியில் குளறுபடி, பயிர் காப்பீடு திட்டத்தில் முறைகேடு என அடுக்கடுக்கான குற்றசாட்டுகளில் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் நிரம்பி வழிகின்றன. பெரும்பாலும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ளதால் உயர் அதிகாரிகளின் பார்வையிலிருந்து தவறிவிடுகின்றன.

இதையே தங்களின் சாதகமாகவும் பயன்படுத்திக்கொள்ளும் இது போன்ற வங்கிகளின் ஊழியர்கள், தங்கள் விருப்பத்துக்கு விளையாடி வருகின்றனர். மாவட்டத்தில் அதிகரித்து வரும் இந்த புதிய குளறுபடிக்கு யார் முடிவு கட்டப்போவது என்ற குழப்பத்தில் விவசாயிகள் விழிபிதுங்கியுள்ளனர். பணபரிமாற்றம் நடக்கும் என்பதால் நாளைய தேவையை நினைத்து முறையிடவும் அஞ்சுகின்றனர். ஒரு கட்டத்தில் குளறுபடிகள் அதிகரித்ததால், பாதிக்கப்பட்ட பலரும் தற்போது புகார் படலத்தை தொடங்கியுள்ளனர்.

திங்களன்று நடக்கும் மக்கள் குறைதீர் கூட்டத்தில் புகார் தெரிவிக்க வருபவர்களில் விவசாயிகளின் எண்ணிக்கை தான் தற்போது அதிகமாக உள்ளது. இதில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் குறித்த புகார்களே அதிகம். இவ்வளவு குளறுபடிகள் ஏற்படும் வரை யாரும் கண்டுகொள்ளவில்லை என்றால், "சம்திங் சம்திங்' சந்தேகம் அதிகரிப்பதில் வியப்பில்லை.

விவசாயிகளை தொடர்ந்து பொதுமக்களுக்கும் இந்த சந்தேகம் வலுத்து வருவதால், ரேஷன், காஸ் வினியோக குறைதீர் கூட்டங் களை போல தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கும் குறைதீர் கூட்டங்கள் நடத்த வேண்டும். மேலும் வங்கிகளின் ஆவணங்களை முறையான தணிக்கை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**சாகுபடி செயல்விளக்க முகாம்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அருகே விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி குறித்து செயல்விளக்க முகாம் நடந்தது.பொள்ளாச்சி அடுத்த புரவிபாளையம் வருவாய் கிராமத்தில் வேளாண் துறை மற்றும் கோவை சூப்பர் ஸ்பின்னங் மில் இணைந்து பருத்தி சாகுபடி செயல்விளக்க முகாம் நடத்தியது. மில் நிர்வாகம் சார்பில் ஒருங்கிணைப்பாளர் ரத்தினசாமி வரவேற்றார். பொள்ளாச்சி வடக்கு வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், உதவி வேளாண்மை அலுவலர் செந்தூர்குமரன் ஆகியோர் பருத்தி சாகுபடி தொழில்நுட்பம் பற்றி விளக்கினர்.

மானாவாரி விவசாயிகள் கோடை உழவு முறைகளை கையாள வேண்டும். பருத்தி விதை நேர்த்தி செய்யும் போது தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும். பருத்தி சாகுபடியில் உரமிடல், பயிர்பாதுகாப்பு முறைகள், இனக்கவர்ச்சி பொறி மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்துதல், உயிரியல் முறைகள், தாவரவியல் கட்டுப்பாடு முறைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. இறுதியாக, தென்னை மரங்களுக்கு காப்பீடு செய்வது குறித்தும், அதனால் கிடைக்கும் பலன்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

**ஆழியாறு அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியது!**

பொள்ளாச்சி : மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்து வரும் கனமழையால் ஆழியாறு அணையின் நீர்மட்டம் 100 அடியை தொட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக பெய்து வருகிறது. இம்மாதம் முதல் இடைவிடாது தொடர்ந்து மழை பெய்வதால் பி.ஏ.பி., தொகுப்பு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து, அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

ஆடிப்பட்டத்தில் தொடர்ந்து மழை பெய்வதால் மானாவாரி விவசாயிகளும், பயிர் சாகுபடி விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சாகுபடிக்கு ஏற்றவாறு நிலத்தை உழுது தயார் நிலையில் வைத்துள்ளனர். வைகாசி பட்டத்தில் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தற்போது பெய்யும் மழை பயனுள்ளதாக உள்ளது.

சோலையாறு அணையின் 160 அடி உயரத்தில் 90.12 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகமாக உள்ளதால், தினமும் ஐந்து அடி வீதம் சோலையாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. சோலையாறு அணைக்கு விநாடிக்கு 3,219 கனஅடி தண்ணீர் வரத்தும், 1,343 கனஅடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது.

பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 28.21 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 1,121 கனஅடி தண்ணீர் வரத்தும், 25 கனஅடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 100 அடிக்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 529 கனஅடி தண்ணீர் வரத்தும், 114 கனஅடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது.

கடந்தாண்டு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை சீசனில் ஆழியாறு அணை நிரம்பி, பல மாதங்கள் 100க்கு கீழ் நீர்மட்டம் குறையாமல் இருந்தது. இந்தாண்டு பாசனத்திற்கு ஆழியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் 100 அடிக்கு கீழ் நீர்மட்டம் சென்றது. தற்போது பெய்யும் மழையால் நீர்மட்டம் உயர்ந்து 100 அடியை மீண்டும் தொட்டுள்ளது. ஆழியாறு அணையில் தற்போது 2,528 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பில் உள்ளது.

திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 29.69 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 70 கனஅடி தண்ணீர் நீர்வரத்தும், 18 கனஅடி தண்ணீர் வெளியேற்றமும் உள்ளது. அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 48.30 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 1,441 கனஅடி நீர்வரத்தும், 361 கனஅடி வெளியேற்றமும் உள்ளது.

நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): சோலையாறு- 34, பரம்பிக்குளம் - 48, ஆழியாறு- 9, திருமூர்த்தி- 2.5, மேல்நீராறு- 67, கீழ்நீராறு - 43, வால்பாறை - 34, தூணக்கடவு - 39, பெருவாரிப்பள்ளம் - 45, மேல்ஆழியாறு- 4, காடம்பாறை -4, பொள்ளாச்சி - 5.4, மணக்கடவு-7.2, நல்லாறு - 7, சர்க்கார்பதி - 20, வேட்டைக்காரன்புதூர் - 14.

வால்பாறை: வால்பாறை டவுன் மற்றும் எஸ்டேட் பகுதிகளில் தென்மேற்குப்பருவ மழை தீவிரமாக பெய்துவருகிறது. இடைவிடாமல் பெய்துவரும் கன மழையினால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளான மேல்நீராறு, கீழ்நீராறு, அக்காமலை, கெஜமுடி டனல், நடுமலை ஆறு, பிர்லாபால்ஸ் ஆகிய பகுதிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கன மழையினால் தொழிலாளர்கள் கையில் உறை அணிந்து தேயிலை பறிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மழைக்கு பயந்து பெரும்பாலான மக்கள் வீட்டை வீட்டு வெளியே வரமால் வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடக்கின்றனர். வால்பாறை எஸ்டேட் பகுதிகளில் கடுங்குளிர் நிலவுவதால் எஸ்டேட் பகுதியில் உள்ள பள்ளிகளில் மாணவர்கள் வருகை குறைவாகவே உள்ளது.

**விரயமாகும் பெரியாறு அணை நீர் வைகை அணை உயர்வதில் சிக்கல்**

ஆண்டிபட்டி:பெரியாறு அணையில் இருந்து திறந்து விடப்படும் நீர் வைகை அணைக்கு குறிப்பிட்ட அளவு வந்து சேராமல் விரயமாகும் விதங்கள் குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். கடந்த சில நாட்களாக பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வதால் அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. பெரியாறு அணையில் இருந்து கம்பம் பகுதி பாசனத்திற்காகவும், மதுரை, தேனி மாவட்ட குடிநீர் தேவைகளுக்கும் வினாடிக்கு 600 கன அடிநீர் திறந்து விடப்படுகிறது.

திறந்து விடப்படும் நீரில் பாசனத்திற்கு பயன்படுத்தியது போக மீதம் 305 கன அடிநீர் வைகை அணைக்கு வந்து சேர வேண்டும். ஆனால் வைகை அணைக்கு 167 கன அடிநீர் மட்டுமே வந்து சேர்கிறது. இதனால் வைகை அணையின் நீர் இருப்பில் குறைவு ஏற்படுகிறது. இது குறித்து பெரியாறு வைகை வடிநில கோட்ட பொறியாளர் விஜயகுமார், வைகை அணை உதவி

செயற்பொறியாளர் சுப்பிரமணியம் ஆகியோர் கூறியதாவது; இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்யாததால் நீர் இருப்பு போதுமானதாக இல்லை.

வைகை அணையில் இருந்து முதல் போக சாகுபடிக்கு நீர் திறக்க முடியவில்லை. பெரியாறு அணையில் இருந்து வரும் நீரை திருட்டுத்தனமாக உறிஞ்சி பல வழிகளிலும் பயன்படுத்துகின்றனர். இதனால் வைகை அணைக்கு வரும் நீர் வரத்து பாதிக்கப்படுகிறது. ஆற்று நீரை திருடுபவர்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ந்து போலீசார் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

தேனி:தேவதானப்பட்டியில் ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேலாண்மை திட் டத்தில் விவசாயிகளுக் கான பயிற்சி முகாம் கலெக்டர் முத்துவீரன் தலைமையில் நடந்தது. தரிசு நிலங்களை மேம் படுத்தி, நீர் வள, நிலவளங்களை பெருக்கவும், மழைநீர் சேமிப்பு, குளங்கள் தூர்வாருதல், தடுப்பணைகள் அமைத் தல், பண்ணை குட்டை, கசிவு நீர் குட்டை, தாவர வரப்புகள், பழ மரக்கன்றுகள் அமைத்து விவசாயிகள் வாழ்வாதாரம் பெருக ஆலோசனை வழங்கப் பட்டது.

5000 எக்டேரில் ஆறுகோடி ரூபாய் மதிப் பீட்டில் திட்ட அறிக்கை தயாரித்து பத்து நீர் வடிப்பகுதி விவசாயிகள் குழுக்கள் மூலம் செயல்படுத்த மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சி நடந்தது. விவசாய துறை துணை இயக்குனர் செல்லத்துரை, கலெக்டர் நேர்முக உதவியாளர் ராமகிருஷ்ணன், தேவதானப்பட்டி ஊராட்சி தலைவர் குணசேகரன், சௌார்டு தொண்டு நிறுவன நிர்வாக இயக்குனர் தங்கமுத்து சமூகவியலர் பிரபாகரன் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.மாவட்ட நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமை உதவி பொறியாளர் செல்லமுத்து நன்றி கூறினார்.

**கொள்ளளவு திறன் குறைவு விவசாயிகள் நலனுக்கு குரல்**

ஊட்டி : "தேயிலைத் தொழிற்சாலை இயந்திரங்களின் கொள்ளளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நீலகிரி உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, தமிழக தொழிற்சாலை மற்றும் வர்த்தகத் துறை செயலருக்கு அனுப்பியுள்ள மனு: நீலகிரியில், 40 ஆண்டுகளுக்கு முன், உருளைக்கிழங்கு விவசாயத்தில் ஏற்பட்ட பாதிப்பால், விவசாயிகள் பலர், பிற காய்கறி விவசாயத்துக்கு மாறினர். அதிகரிக்கும் விவசாய செலவீனங்களால், தேயிலை

சாகுபடியை மாற்றுப் பயிராக அரசு அறிமுகப்படுத்தி செயல்படுத்தியது. அக்காலகட்டத்தில், பசுந்தேயிலை கொள்முதலுக்கு ஏற்ப தொழிற்சாலைகளில் அரைவை இயந்திரங்கள் நிறுவப்பட்டன.

தற்போது, தேயிலை சாகுபடி மற்றும் மகசூல் அளவு அதிகரித்ததால், அரவையில் சிக்கல் நிலவுகிறது. குறிப்பிட்ட அளவுக்கு மேல் உள்ள பசுந்தேயிலை புறக்கணிக்கப்படுகிறது; விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதைப் போக்க, தேயிலைத் தொழிற்சாலைகளின் அரவை இயந்திரங்களின் கொள்ளளவை கூடுதலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; அல்லது, மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு,கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

**விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள்**

தூத்துக்குடி:ஆறுமுகமங்கலம் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வேளாண்மை சேவை மையத்தில் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள் விநியோகம் செய்யப்படுகிறது.ஆறுமுகமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் சேவை மையம் செயல்பட்டு வருகிறது.

இக்கடன் சங்க வேளாண் சேவை மையம் மூலம் பவர்டில்லர், நேரடி நெல் விதைக்கும் கருவி, தென்னைமரம் ஏறும் கருவி, களையெடுக்கும் கருவி, மருந்து தெளிக்கும் கைத்தெளிப்பான், பாட்டரியில் இயங்கும் தெளிப்பான் போன்ற வேளாண் கருவிகள் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் வாடகைக்கு விடப்படுகிறது. மேலும் விவசாயிகளுக்கு தேவையான விதை நெல், உரம் அரசு நிர்ணயித்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகளும், உறுப்பினர்களும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள இச்சங்கத்தின் செயலாளர் சுப்பையா மற்றும் தனி அலுவலர் நட்டார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

---

தினத்தந்தி DAILY THANTHI

## *கோவையில் கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் ஆர்ப்பாட்டம் கறிக்கோழி கிலோவுக்கு ரூ. 10 அதிகம் தரவேண்டும்*

கோவை,ஜூலை.22–
கறிக்கோழி வளர்ப்புக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 10 அதிகமாக தர வேண்டும் என்று கோரி கோவையில் கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை மாவட்டத்தில் கறிக்கோழிகள் வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. மாவட்டம் முழுவதும் நூற்றுக்கணக்கான கறிக்கோழி வளர்ப்பு பண்ணைகள் உள்ளன. இந்த தொழிலை நம்பி ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர். கறிக்கோழி நிறுவனங்கள் கோழி குஞ்சுகளை பண்ணையாளர்களிடம் வளர்ப்பதற்காக கொடுக்கின்றன. அதனை பண்ணையாளர்கள் வளர்த்து மீண்டும் கறிக்கோழியாக நிறுவனங்களுக்கு கொடுக்கின்றனர்.

கறிக்கோழிகளை வளர்ப்பதற்கு அதிக செலவு ஆகிறது என்றும், கோழி வளர்ப்பு கூலித் தொகையை கறிக்கோழி நிறுவனங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால் அவர்கள் கோரிக்கை மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் கோவை மாவட்ட கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் சங்கத்தினர் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை காந்திபுரம் மத்திய பஸ் நிலையம் முன்பு நேற்றுக்காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கோரிக்கைகள்

கறிக்கோழி வளர்ப்புக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 10 உயர்த்தி தர வேண்டும், ஆண்டுக்கு ஒருமுறை 10 சதவீதம் உயர்த்தி தர வேண்டும், கோழி ஒன்றுக்கு ரூ. 5 வீதம் ஆண்டுதோறும் போனசாக வழங்கிட வேண்டும், பண்ணையாளர்களுக்கு எப்.சி.ஆர். கணக்கு முறையில் ஒளிவு மறைவின்றி கணக்கிட்டு 10 நாட்களுக்குள் தொகை பட்டுவாடா செய்யப்பட வேண்டும். கறிக்கோழி ஒருங்கிணைப்பு கமிட்டியில் பண்ணையாளர்கள் சங்க நிர்வாகிகளை உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும். கறிக்கோழி குஞ்சின் விலை மற்றும் கோழிகளின் விலையை செயற்கையாக ஏற்றுவதையும் இறக்குவதையும் நிறுத்த வேண்டும். பண்ணையாளர்களுக்கு இலவச மின்சாரம் பெற்றுத்தர நிர்வாகம் வழிவகை செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.


கோஷங்கள்

ஆர்ப்பாட்டத்துக்கு கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் சங்க தலைவர் ஓ.வி.மூர்த்தி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் செயலாளர் எம்.ஈசுவரமூர்த்தி, பொருளாளர் மார்கண்டசாமி, மாநில பிரசாரக்குழு தலைவர் பெரியசாமி மற்றும் மாநில கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கோவை மாவட்டம் முழுவதுமிருந்து கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ‘கோழி வளர்ப்பவன் வீதியிலே, குஞ்சு கொடுப்பவன் மாடியிலே’, ‘நசுக்காதே, நசுக்காதே பண்ணையாளரை நசுக்காதே’, ‘கூலி தொகையை உயர்த்தி கொடு’ என்பன போன்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினார்கள்.

## ஏப்ரல் – ஜூன் மாத காலத்தில் முந்திரி ஏற்றுமதி ரூ.713 கோடியாக உயர்வு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
கொச்சி
நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டின் முதல் காலாண்டில், நாட்டின் முந்திரி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் குறைந்துள்ள நிலையில், மதிப்பின் அடிப்படையில் வளர்ச்சி கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
25,862 டன்
சென்ற ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், நம் நாட்டிலிருந்து 25,862 டன் முந்திரி ஏற்றுமதியாகி உள்ளது. இதன் மதிப்பு ரூ.713.01 கோடியாகும். இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் 26,295 டன் என்ற அளவிலும், ரூ.698.46 கோடி என்ற மதிப்பிலும் இருந்தது. இக்காலாண்டுகளில், அளவின் அடிப்படையில் முந்திரி ஏற்றுமதி 433 டன் குறைந்துள்ளது. அதேசமயம், மதிப்பின் அடிப்படையில் ரூ.14.55 கோடி அதிகரித்துள்ளது என இந்திய முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு குழு தெரிவித்துள்ளது.
குறிப்பாக, சென்ற ஜூன் மாதத்தில், இதர ஆசிய நாடுகளில் முந்திரிக்கான தேவைப்பாடு அதிகரித்தது. மேலும், இம்மாதத்தில், ஒரு கிலோ முந்திரியின் விலை ரூ.288.89–ஆக அதிகரித்திருந்தது. இது, சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் ரூ.262.33–ஆக இருந்தது. முந்திரியின் விலை உயர்ந்துள்ளதால், அளவின் அடிப்படையில், முந்திரி ஏற்றுமதி குறைந்துள்ள போதிலும், மதிப்பின் அடிப்படையில் அதிகரித்துள்ளது என இந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.
முந்திரி எண்ணெய்
முந்திரி ஓட்டிலிருந்து எடுக்கப்படும் முந்திரி எண்ணெய் ஏற்றுமதியும், இக்காலாண்டில் 2,012 டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.5.60 கோடியாகும். சென்ற ஆண்டின் இதே காலாண்டில் இது 1,687 டன் என்ற அளவிலும், மதிப்பின் அடிப்படையில் ரூ.4.17 கோடி என்ற அளவிலும் இருந்தது. முந்திரி எண்ணெய், பெயிண்டு மற்றும் தொழில் துறை நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது.



மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் சிறுவாணி அணைக்கு தண்ணீர் வழங்கும் அருவிகளில் வெள்ளியை உருக்கி வார்த்தது போல் தண்ணீர் கொட்டும் அழகிய காட்சியை படத்தில் காணலாம்.

### அருவிகளில் வெள்ளம்

# சிறுவாணி அணை நீர்மட்டம் உயர்வதால் குடிநீருக்கு பஞ்சம் இல்லை

கோவை,ஜூலை.22–

சிறுவாணி அணை பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் கோவையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது.

**சிறுவாணியில் மழை**

கோவை நகருக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணை மற்றும் அடிவார பகுதிகளில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவ மழை பெய்து வருகிறது. அவ்வப்போது கருமேகங்கள் திரண்டு திடீரென மழை பொழிந்து வருகிறது. தினமும் 20 முதல் 45 மில்லிமீட்டர் மழை பெய்து வருவதால் சிறுவாணி அணையை சுற்றி உள்ள மலை அருவிகளில் தண்ணீர் கொட்டுகிறது.

இதனால் அணையின் நீர்மட்டம் ஒரு வாரமாக 869.5 மீட்டர் என்ற நிலையில் இருந்து வந்தது. நேற்றும் மழை பெய்ததால் சிறுவாணி அணையின் நீர்மட்டம் 870 மீட்டராக உயர்ந்தது.

**நீர்மட்டம் குறையவில்லை**

சிறுவாணி அணையில் இருந்து கோவை மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு தினமும் 8 கோடியே 70 லட்சம் லிட்டர்(87 எம்.எல்.டி.) தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. இதில் கோவை நகருக்கு மட்டும் தினமும் 7 கோடியே 20 லட்சம் லிட்டர் தண்ணீரும், புறநகர் பகுதிகளுக்கு 1 கோடியே 50 லட்சம் லிட்டர் தண்ணீரும் வினியோகிக்கப்படுகிறது. வழக்கமாக கோடை நேரத்தில் இதே அளவுக்கு தண்ணீர் எடுக்கும்போது தினமும் 10 சென்டிமீட்டர் வீதம் குறைந்து நீர்மட்டம் ஒருவாரத்திற்குள்ளாக கீழே இறங்கிவிடும். ஆனால் அணையில் சில நாட்களாக பெய்த மழை காரணமாக குடிநீருக்கு தண்ணீர் எடுத்தபோதும் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அணையில் நீர் எடுக்கும் பகுதியில் உள்ள 4 வால்வுகளில் ஒரு வால்வு மட்டுமே தற்போது நீருக்கு வெளியே தெரிகிறது.

**குடிநீர் பிரச்சினை இல்லை**

சிறுவாணி அணை நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யும் என்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அணையின் மொத்த கொள்ளவு 878.5 மீட்டராகும். படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்து முழு கொள்ளளவையும் இன்னும் ஒரு மாதத்துக்குள் எட்ட வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறுவாணி அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் கோவை நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. இதேபோல் பில்லூர் அணையிலும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. பில்லூர் குடிநீர் பகுதி பெறும் பகுதிகளான கோவை சிங்காநல்லூர் உள்பட பல பகுதிகளில் மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்ப குடிநீர் குழாய்களை அகலமானதாக அமைப்பதுடன், மேலும் கூடுதல் இடங்களில் மேல்நிலை குடிநீர் தொட்டிகளை அமைத்து குடிநீர் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### கோவையில் தினசரி தண்ணீர் வினியோகம் செய்ய ஏற்பாடு:

# ரூ.140 கோடியில் உருவாகி வரும் பில்லூர் 2-வது குடிநீர் திட்டம்

கோவை மாநகராட்சி பகுதியில் சுவையான சிறுவாணி குடிநீர் வினியோகம் என்பது வரப்பிரசாதமாக இருந்து வருகிறது.ஆனால் வளர்ந்து வரும் கோவை மாநகரின் வசதிக்கு ஏற்ப சிறுவாணி அணையின் தண்ணீர் போதுமானதாக இல்லை. இதனால் பில்லூரர் அணையில் இருந்து மற்றொரு குடிநீர் திட்டம் உருவானது. இந்த பில்லூரர் முதல் குடிநீர் திட்டம், கூட்டு குடிநீர் திட்டமாக விளங்கியதால் பாதி அளவு தண்ணீர்தான் கோவை மாநகராட்சி பயன்பாட்டுக்கு வருகிறது. ஆரம்ப காலத்தில் இந்த இரு குடிநீர் திட்டங்களும் ஓரளவுக்கு தாகம் தீர்த்தது. ஆனால் அதிகரித்து வரும் மக்கள் தொகையால் கோவையிலும் குடிநீர் பற்றாக்குறை என்ற நிலை உருவாகி இருக்கிறது.

**பில்லூரர்–சிறுவாணி அணை**

பில்லூரர் அணையில் இருந்து நாள் ஒன்றுக்கு எடுக்கப்படும் 125 மில்லியன் லிட்டர் குடிநீரில் 65 மில்லியன் லிட்டர் குடிநீர்தான் கோவை மாநகராட்சி கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களுக்கும் மீதமுள்ள 60 மில்லியன் லிட்டர் குடிநீர் புறநகர் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதேபோல சிறுவாணி மூலம் தினமும் 75 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்படுகிறது. இதில் 70 மில்லியன் லிட்டர் குடிநீர் மாநகராட்சி மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. மீதமுள்ள குடிநீர் வழியோர கிராமங்களுக்கு செல்கிறது.

பில்லூரர் அணையை பொறுத்தவரை அதன் நீர்மட்டம் குறைந்தாலும் அதற்கு மேல் உள்ள அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு, நீர்மட்டம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு கீழ் இறங்காமல் பராமரிக்கப்படுகிறது.

**ரூ.140 கோடியில் திட்டம்**

சிறுவாணி அணையை பொறுத்தவரை, அதன் 3–வது வால்வு வழியாக தண்ணீர் எடுக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் குறைந்தால், கடைசி வால்வு வழியாக மட்டுமே குடிநீர் எடுக்க முடியும். அப்போது அணையில் இருந்து வால்வு வழியாக வெளியேறும் குடிநீரின் அழுத்தம் குறையும். ஆகவே சிறுவாணி அணை குடிநீரை மட்டும் கோவையின் தற்போதைய குடிநீர் தேவைக்கு முழுமையாக பயன்படுத்திவிட முடியாது.

இந்த நிலையில் பில்லூரர், சிறுவாணி அணைகளில் இருந்து பெறப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை என்பதால் கடந்த சில ஆண்டுகளாக கோவை மாநகராட்சியின் பல பகுதிகளில் 10 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் வினியோகம் உள்ளது. இதனால் பொதுமக்கள் குடிநீர் தேவைக்காக தவம் இருக்கும் நிலை காணப்படுகிறது. இந்த குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் ரூ.140 கோடி செலவில் கடந்த 2009–ம் ஆண்டு பில்லூரர் 2–வது குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டது.

**சுரங்கம் வழியாக தண்ணீர்**

இந்த திட்டத்தில் ஜவஹர்லால் நேரு மேம்பாட்டு திட்டத்தின் பங்கு ரூ.113.74 கோடி ஆகும். மீதம் உள்ள தொகையை கோவை மாநகராட்சி ஏற்றுள்ளது. இந்த திட்டத்தில் பில்லூரர் அணைப் பகுதியில் இருந்து 323 மீட்டர் தூரத்தில் பெரிய கிணறு ஒன்று அமைக்கப்படுகிறது. அந்த கிணற்றுக்கு, ஆற்றில் இருந்து சுரங்கம் வழியாக தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. அந்த தண்ணீரை கொண்டுவருவதற்கு 3 ராட்சத மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்படுகிறது. பின்னர் அந்த கிணற்றில் இருந்து 3.85 கிலோ மீட்டர் தூரத்துக்கு பெரியகொம்பை பகுதிவரை சுரங்கம் வழியாக தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. இதைத் தொடர்ந்து அங்கிருந்து குழாய் மூலம் 1.1 கிலோ மீட்டர் தூரத்துக்கு வெள்ளியங்காடு சுத்திகரிப்பு நிலையத்துக்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. பின்னர் அங்கிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்துக்கு சுரங்கம் வழியாக கட்டன்ஹில் பகுதி வரை தண்ணீர் கொண்டுவரப்படுகிறது.

அங்கிருந்து குழாய் மூலம் சுமார் 35 கிலோ மீட்டர் தூரம் தண்ணீர் கொண்டுவரப்பட்டு கோவை மாநகராட்சி பகுதியில் உள்ள மேல் நிலை தொட்டிகளில் சேகரித்து வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது. இதுகுறித்து கோவை மாநகராட்சி மேயர் வெங்கடாசலம் கூறியதாவது:–

**பிப்ரவரி மாத இறுதியில் பணி முடியும்**

தற்போது பில்லூரர் 2–வது குடிநீர் திட்டத்தில் 70 சதவீத பணிகள் முடிவடைந்து விட்டன. குழாய் பதிப்பு பணியை பொறுத்தவரை இன்னும் 5 கிலோமீட்டர் அளவுக்குதான் பணிகள் நடைபெற வேண்டி உள்ளது. ரெயில்வே கிராசிங், தேசிய நெடுஞ்சாலை பகுதிகளில் இதற்கான பணிகள் நடைபெற உள்ளது. இந்த பணிகள் தவிர, பில்லூரர் ஆற்றோரத்தில் அமைக்கப்பட்டு வரும் கிணறு, வெள்ளியங்காட்டில் அமைக்கப்பட்டு வருகிற சுத்திகரிப்பு நிலையம் போன்ற பணிகளை வருகிற பிப்ரவரி மாதத்துக்குள்ளாக முடிப்பதற்கு முடுக்கி விடப்பட்டு உள்ளது. பில்லூரர் 2–வது திட்ட குடிநீர் முழுவதும், அதாவது 125 மில்லியன் லிட்டர் தண்ணீரும், சிறுவாணி அணையின் 75 மில்லியன் லிட்டர் தண்ணீரும் மாநகராட்சிக்கே கிடைக்கும். இவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் கோவை மாநகராட்சி பகுதியில் ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது தினசரி குடிநீர் வினியோகமும் நடைபெறும். கோவை மாநகராட்சி முழுவதும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது.இவ்வாறு மேயர் வெங்கடாசலம் கூறினார்.

பில்லூரர் 2–வது குடிநீர் திட்டத்தை பொறுத்தவரை முழுக்க முழுக்க, கோவை மாநகராட்சி கட்டுப்பாட்டில் செயல்படும் முதல் குடிநீர் திட்டம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.